11.11.2025

O.S.No.281/2022

PW1– முகம்மது கனி– த/பெ. முகம்மது மீரான்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.11.2025

குறுக்கு விசாரணை : ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

1. நான் இந்த வழக்கில் பிராது பரிகாரம் படி வெறும் நிரந்தர தடையாணை கேட்டுதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி இந்த சொத்தினையும் சேர்த்து கூடுதல் சொத்திற்கு எனக்கு எதிராக தென்காசி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.147/2023 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதுதற்போது நிலுவையில் இருந்துவருகிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் வழக்கு சொத்திற்கான புலவரைபடம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் தாவா சொத்திற்கான பட்டா என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டாவில் உள்ள நபர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் பட்டாவில் நான் மட்டும்தான் தரப்பினராக உள்ளேன்.

2. இவ்வழக்கு சொத்து சம்பந்தமாக ஏற்கனவே ஒரு வழகக்கு நடைபெற்று அந்த தீர்ப்பின் அடிப்படையில் 1ம் பிரதிவாதியின் முனனோர்கள் வழக்குசொத்தில் பிரிவின்றி 1 பகுதியை பொறுத்து 08.10.1943ல் பழனியாண்டி செடடியார் என்பவருக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. கடந்த 04.11.1980ல் முத்துசாமி ஆசாரி என்பவருக்கு மைதீன் பாவா என்பவர்

1 ஏக்கர் 50 செண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதற்கான ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. கடந்த 26.09.1981 ல் மேற்படி மைதீன் பாவா என்பவர் அருணாசலதேவர் என்பவரிடமிருந்து 1 ஏக்கர் 40 செண்ட் நிலத்தினை கிரையம் எழுதி பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேலும் 07.09.1992 ல் முகைதீன் பாவா என்பவருக்கு பேச்சிமுத்துபாண்டியன் என்பவர் 50 செண்ட் நிலத்தினை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

4. வா.சா.ஆ.13 ஆவணத்தின் அடிப்படையில்தான் நான் தாவா சொத்தை கியைரம் வாங்கியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. நான் பராதில் வா.சா.ஆ.13 படி தான் உரிமை உள்ளது என கட்சி செய்கிறேன் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.13 ல் தாவா சொத்து எந்தஇடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என சொல்லமுடியுமா என்றால் முடியாது. வா.சா.ஆ.13 ல் காணும் சொத்துக்கள் பிரிவின்றி சொத்துக்களாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது பெயரில்தான் உள்ளது, யார் பெயரிலும் எழுதி வைக்கவில்லை.

5. வா.சா.ஆ.1 ஆவணம் எனது கிரையப்பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஜமீன் அடங்கலின் கார்லேஷன் பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்

தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 தீர்வை ரசீதுகள் யாவும் இவ்வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டவை அல்ல என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.3 ஆவணத்தில் பெயர் தவறாக உள்ளது. பெயரை திருத்துவற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து மேற்குதொடர்ச்சி அடிவாரத்தில் உள்ளது என்றால் சரிதான். வனவிலங்குகள் வந்துசெல்லும் என்றால் சரிதான்.

7. வழக்குசொத்தில் கருவேலமரங்களாக இருந்தது, அதை 1ம் பிரதிவாதி ஆட்களை வைத்துபிடுங்கினார் என்றால் சரியல்ல, அதில் என்னுடைய மாமரங்கள்இருந்தது, அதை ஆட்களை வைத்து அகற்றினார். தாவா இடத்தில் மாமரங்கள் இருந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கறிஞர் மூலம் 1ம்பிரதிவாதி மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையம் சென்றேன் என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கை தாக்கல் செய்யாததால் உயர்நீதிமன்றத்தை நாடி உத்தரவு பெற்றோம் என்றால் சரிதான். அதை விசாரணை செய்து பொய்வழக்கு என காவல்துறையினர் முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. வில்லங்க ஆவணங்களின் அடிப்படையில் பார்த்தாலும் வழக்குசொத்தை பொறுத்து 3 வில்லங்க குறிப்பு உள்ளது என்றால் சரியல்ல.

8. வழக்கு சொத்தைபொறுத்து அதிகமான உரிமை பிரச்சனைகள் இருந்துவருகிறது, அது நிலுவையில் இருக்கும் சமயத்தில் நான் கேட்டுள்ள நிரந்தர தடையாணை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.